**தன்னாட்சி, அறப்போர், Voice of People,**
**Institute of Grassroots Governance [IGG] & தோழன்**

**முகவரி:** 69, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001.
**மின்னஞ்சல்:** thannatchi@gmail.com
**அலைபேசி:** 94457-00758

**17.12.2024,**
**சென்னை.**

# பத்திரிகைச் செய்தி

## 28 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்துக!

கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பரில், 27 மாவட்டங்களில் இருந்த 91,975 ஊரக உள்ளாட்சி உறுப்பினர்கள் (515 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், 5,090 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள், 9,624 கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் 76,746 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்) பொறுப்புகளுக்கானத் தேர்தல் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பதவிக்காலம், வரும் 05.01.2025 அன்று முடிவடைகிறது. 2019 உள்ளாட்சித் தேர்தல்களுக்குப் பிறகு, 28.12.2020 இல் நாகப்பட்டினத்திலிருந்து, மயிலாடுதுறை தனிமாவட்டமாகப் பிரிக்கப்பட்டதால், தற்போது 28 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சிகளின் பதவிக்காலம் முடிவடையும் தருவாயில் உள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் சட்டப்பூர்வ ஆணையின்படி, ஊரக உள்ளாட்சித் தேர்தல்களுக்கான பொது அறிவிப்பு, 09.12.2019 அன்று உரிய மாவட்ட அரசிதழ்களில் வெளியிடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு, சம்பந்தப்பட்ட 28 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் குறித்து இதுவரை எந்த பொது அறிவிப்பும் மாநில தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்படவில்லை.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 243E(3)(a), ஊரக உள்ளாட்சிகளின் பதவிக்காலமான 5 ஆண்டுகள் முடியும் முன்பு, அவற்றுக்கானத் தேர்தல் நடத்தி முடிப்பதை கட்டாயமாக்கியுள்ளது. இந்தக் கடப்பாடு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 243K இன்படி, மாநிலத் தேர்தல் ஆணையங்களுக்கு உரியது. 243K (3) இன் படி, இதற்கு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு முழு ஒத்துழைப்பையும் அளிக்கும் பொறுப்பு, மாநில அரசுக்கு உண்டு!

எதிர்பாராத வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் அல்லது மாநிலத்தில் நிலவும் அதி அவசர சூழல் போன்ற அசாதாரண உண்மைக் காரணங்கள் தவிர்த்து, வேறெந்த காரணத்திற்காகவும் 243E பிரிவைக் கடைபிடிக்காமல் இருக்கக்கூடாது என்பது உச்சநீதிமன்றம் **(W.P. NO. 719/95, SUPREME COURT OF INDIA, 1997)** மற்றும் பல்வேறு உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் நிறுவியுள்ளச் சட்ட நிலைப்பாடு. அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 243E(3)(a)யை கடைபிடிக்காமல் இருப்பது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு முற்றிலும் எதிரானது.

மேலும், பல கிராம ஊராட்சிகள், பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுடன் இணைக்கப்படுவதாகவும் அதனால், வார்டு மறுவரைப் பணிகள் இருக்கும் என்பதால், உள்ளாட்சித் தேர்தல்கள் தள்ளிப் போகலாம் என்றும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், வார்டு மறுவரைப் பணிகளைக் காரணம் காட்டி, அரசியலமைப்புச் சட்டப்படி 5 ஆண்டுகள் பதவிக்காலம் முடிவடைவதற்குள் நடத்தப்பட வேண்டிய உள்ளாட்சித் தேர்தல்களை, நடத்தாமலிருக்கக் கூடாது! எனவும், இதில் மாநில தேர்தல் ஆணையமோ, மாநில அரசோ ஏன் உச்சநீதிமன்றமோ கூட இந்த அரசியலமைப்புக் கடப்பாட்டை மீறிச் செயல்பட முடியாது எனவும் **SURESH MAHAJAN Versus STATE OF MADHYA PRADESH & ANR {W. P [(CIVIL) NO. 278 OF 2022]}** வழக்கில், மூன்று நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு அழுத்தம் திருத்தமாகத் தெளிவுபடுத்தியுள்ளது.

சம்பந்தப்பட்ட 28 மாவட்டங்களில், கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் 2019 வரை உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறாததால், குடிநீர், தெருவிளக்கு, சாலை, திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்டவற்றில் மக்கள் பல இன்னல்களைச் சந்தித்தார்கள். தற்போது, உள்ளாட்சித் தேர்தல்கள் உரிய காலத்தில் நடைபெறாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகத்திற்கு மாற்றாக, தனி அலுவலர் நிர்வாக முறை மீண்டும் அமைந்து விடுமோ என்ற அச்சம் பொதுமக்கள் மனதில் நிலவி வருகிறது.

இது தொடர்பாக, சமீபத்தில் தன்னாட்சி, அறப்போர், Voice of People, Institute of Grassroots Governance [IGG] & தோழன் ஆகிய அமைப்புகளின் சார்பாக, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப., (ஓ) மற்றும் முதல்வரின் செயலாளர்-II டாக்டர் எம்.எஸ். சண்முகம் இ.ஆ.ப., ஆகியோரை நேரில் சந்தித்து, 28 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்த வலியுறுத்தியுள்ளோம்.

**தேர்தல்கள்தான் ஜனநாயகத்தின் உயிர்நாடி. உரிய காலத்தில் தேர்தல்களை நடத்தாமல் இருப்பது, ஜனநாயகப் படுகொலையன்றி வேறல்ல.**

எனவே,

1. தமிழ்நாட்டில், ஊரக உள்ளாட்சிகளின் பதவிக்காலம் முடிவடைய இருக்கும் 28 மாவட்டங்களில், வரும் 05.01.2025 க்குள் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தி முடித்திட, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் உரிய, துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
2. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு, உள்ளாட்சித் தேர்தல்கள் தொடர்பாக தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்

என வலியுறுத்துகிறோம்.

**தன்னாட்சி, அறப்போர், Voice of People,**
**Institute of Grassroots Governance [IGG] & தோழன்**